முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1323

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

14.05.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானிகள் பலம் கொண்ட அரங்கனே
ஞானபலம் கொண்ட தேசிகனே
வானவர்கள் மெச்சும் குருராஜனே
வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 31 ம் நாள், 14.05.2023, ஞாயிற்றுக்கிழமை)
துணிவுகொண்டு உன்வழி தொண்டர்படை
தொடர்ந்து தர்மசேவை ஆற்றி
3. ஆற்றியே கலியுகத்தை மாற்றும்
அற்புதத்தை உலகில் நிகழ்த்தி வர
மாற்றம் உன்னால் நடக்குமப்பா
மண்ணுலகில் முருகன் யான் உன்னோடு இருந்து
4. ஆற்றல்பட உன் தொண்டர்களுக்கும் வரம்தந்து
அகிலத்தையே சுத்திசெய்து வருகின்றேன்
வருகவே உயிர்கொலை நீக்கி
வல்லமைபட சன்மார்க்க நெறிபிறழா
5. தர்மத்தை கடைபிடிக்கும் யாவர்க்கும்
தண்டாயுதன் என்பால் பரிபூரண ஆசி தொடர்பு கூடுமப்பா
அப்பனே என்தொடர்பு கூடி வர அகிலத்தில் பலபேர்கள் இன்பமுற
அரங்கன் உன்வழி அழியாமைபெற்று எண்ணிலாகோடி
சித்தரிஷிகணங்களோடு இவர்களெல்லாம் ஞானியர் படைகளாக
6. ஆகவே மாறி இனிதே
அகிலத்தில் ஞான ஆட்சி மலரக்கூடும்
ஞானவான் உன்னால் இந்த அற்புதம்
ஞாலமதில் உலகமெல்லாம் கண்டு தேறும்

7. தேறவே அரங்கனே உன் தொடர்பு
தெய்வீகத்தை மக்களுக்கு தருவதோடு
மரணமில்லா பெரு வாழ்வு மறுமைவென்று
மண்ணுலகில் சகலரும் தேறக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—